From the costumes, background music, acting and dialogue delivery to the nail-biting climax in which the unsuspecting Sergeant Trotter is revealed to be the elusive murderer, the play kept the audience glued to the seat. "The credit goes to the students, who set the stage and built the props that required multiple windows and doors to bring in the feel of separate compartments in the same building. They also practised for three weeks to get the correct accent, expressions and coordination," says Geetaa S Abraham, the vice chairperson of the college who directed the play.

"Theatre is a great chance to live a few moments as another person. I have acted in several plays from my school days and lived many moments as different people," says, Parvati Natarajan, who played Miss Casewell, a mannish woman. "I believe theatre gives you an opportunity to inspire people by getting on stage," says, Ancey Sara Thomas, who played Mollie Ralston. "Acting has been a passion for me since childhood and college plays give me the break. I hope to make a career out of it," says Abdul Hadhi, who played Sergeant Trotter.

At Thiagarajar Arts College, Teppakulam, Madurai, members of Stage Sculptors, the theatre club of the English Department, effortlessly brought to life the Shakespearean rom-com *The Merchant of Venice*. Replete with comical overtones, emotional scenes on friendship and love, it was performed with elan and ease in 90 minutes. The friendship between Antonio, the Venetian merchant and Bassanio, suitor to the rich heiress Portia and the vengeful nature of Jew moneylender Shylock, were brought out realistically by the students.

"This is the third year, we have staged a play in the college. Theatre is an integral part of literature and helps students to experience the characters they read about in the book," says Bezaleel, the director of the play. "Staging a play is much about team work. I did a small role last year in Macbeth but this time, I enjoyed playing the meaty role of Shylock," says Karthik Kumar. S Parasad, who played Antonio, says, "The lead character Antonio is a melancholic role and I started to live the character during practice sessions. That helped me pull it off easily."





**Talent on display** A scene from 'The Merchant of Venice' (Top) and The Mousetrap • R ASHOK & SPECIAL ARRANGEMENTS

**தினமணி**

www.dinamani.com

**07-09-2018** பக்கம் எண்: **2**



ஆங்கில எழுத்தாளர் ஸ்டீபன் மைர் எழுதிய டிவில்லைட் எனும் திகில் நாவலை வாங்கிச்செல்கிறேன். அத்துடன் லவ்வி போன்ஸ் எழுதிய எலைஸ் செபால் எனும் நூலையும் வாங்கிச்செல்கிறேன். இது காதல் கதையாகும். வைரமுத்துவின் கள்ளிக் காட்டு இதிகாசத்தை தற்போதுதான் வாங்கிச்செல்கிறேன். மேலும், அண்மையில் மறைந்த இயற்பியல் ஆராய்ச்சியாளர் ஸ்டீபன் காக்கின்ஸ் வாழ்க்கை வரலாறையும் வாங்கிச்செல்கிறேன்.

அப்ரோஸ் (48), உளவியல் துறை மாணவி,
தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மதுரை

**தினமலர்**

**DINAMALAR**

**09-09-2018** பக்கம் எண்: **12**

## நூல் வெளியீடு

மதுரை, செப்.9 –

மதுரை தமுக்கம் புத்தக திருவிழாவில் தியாகராஜர் கல்லூரி தமிழ்த்துறை உதவி பேராசிரியை சத்யா தேவி எழுதிய சங்க இலக்கியமும் பெண் மொழியும் என்ற நூல் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர் முத்து கிருஷ்ணன் முதல் பிரதியை வெளியிட பேராசிரியர் முத்துக்குமார் பெற்றுக்கொண்டார்.

எழுத்தாளர் ஆத்மார்த்தி, பேராசிரியர் சுந்தரகாளி, டிஸ்கவரி புக் பேலஸ் வேடியப்பன், பேராசிரியர் ஸ்டாலின் ராஜாங்கம், சியாமளா வாணி ரேடியோ ஸ்டேஷன் வெங்கடேஷ், ஆசிரியர் சிவா, சுரேஷ்காதன், சமூக ஆர்வலர் செல்வம் ராமசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமணி
www.dinamani.com

10-09-2018 பக்கம் எண்: 2



மேக்பெர்த் எனும் ஷேக்ஸ்பியரின் நூலை வாங்கிச்செல்கிறேன். அவரது 'லைக் இட்' எனும் நாவலையும் வாங்கிச் செல்கிறேன். பொதுவாக ஷேக்ஸ்பியரின் படைப்புகள் பிடிக்கும் என்பதால் அவரது நூல்களை வாங்கிச்செல்கிறேன். தமிழ் இலக்கியங்களை அவ்வளவாக படித்ததில்லை.

விஷ்ணுபிரியா, பிபிஏ மாணவி,
தியாகராஜர் கல்லூரி.

THE NEW INDIAN EXPRESS

11-09-2018 Page No : 4

## Rotaract Club must fight societal woes

Madurai: Rotaract Club students should find solutions for the challenges in the society, said Thiagarajar Arts and Science College Principal D Pandiaraja, during the orientation programme of the Rotaract Club held at the college premises here, on Monday. Pandiaraja, in his presidential address, briefed about the history of Rotary clubs and said that as many as 10,000 clubs are functioning all over the world, with a three-lakh membership. He further said that Rotarians were reaching the public through their tireless service.

தினமணி
www.dinamani.com

17-09-2018 பக்கம் எண்: 4

**தியாகராஜர் கல்லூரி:** மதுரை தியாகராஜர் கல்லூரியின் மாணவியர் வழிகாட்டுதல் மையம் சார்பில் இன்றைய சூழலில் மாணவியர் மன நலம் எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடந்தது. மனநல ஆலோசகர் இன்பா சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா தலைமை வகித்தார். மைய ஒருங்கிணைப்பாளரும், தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியை மலர்விழி மங்கையர்க்கரசி வாழ்த்துரை வழங்கினார்.

தினமலர்
DINAMALAR
18-09-2018 பக்கம் எண்: 1

# இயற்கையை நேசிக்கும் 'நேச்சர் கிளப்' குழு

## மாணவியரின் சுற்றுச்சூழல் சேவை

**மதுரை, செப். 18 –** மதுரை நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் சுற்றுப்புற பாதுகாப்பு பணியில் இளைஞர்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வாரத்தில் ஒரு நாள் மரக்கன்று நடுதல், விதை பந்து வழங்குதல், குப்பை மேலாண்மை குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.

மதுரையை 'ஸ்மார்ட் சிட்டி'யாக மாற்ற மாநகராட்சி நிர்வாகம் முயற்சிக்கும் வேளையில் சுற்றுப்புற அக்கறை இல்லாத சிலரால் 'சுமார் சிட்டி'யாக மாற்றப்பட்டு வருகிறது. இதற்கு தீர்வு காண களமிறங்கி இருக்கின்றனர் இயற்கையை நேசிக்கும் மதுரை தியாகராஜர் கல்லூரி 'நேச்சர் கிளப்' மாணவியர்.



அருணா

கிளப் ஒருங்கிணைப்பாளரான தாவரவியல் துறை பேராசிரியர் ஆர். அருணா கூறியதாவது:

நம் வீட்டை, தெருவை, ஊரை சுத்தமாக வைத்துக் கொள்ள அனைவரும் எண்ண வேண்டும். அந்த எண்ணத்தை ஒவ்வொருக்கும் வரவழைக்க வேண்டும் என்பதே லட்சியம். இதற்காக கிராமம் ஒன்றை தத்தெடுத்து சுய உதவி குழுக்கள் மூலம் சுற்றுப்புற தூய்மை பணியில் ஈடுபடவுள்ளோம். மாணவிகளுடன் மரங்கள், மரங்களை நம்பி இருக்கும் பறவைகள், உயிரினங்கள், நீர் நிலைகள், மலைகளை பார்வையிட்டு அதை பாதுகாப்பது குறித்து கலந்துரையாடுகிறோம். கல்லூரியில் மண்புழு உரம் தயாரிப்பு கூடம் இருப்பதால் குப்பையில் இருந்து மண்புழு உரம் தயாரிப்பது குறித்தும் மக்களிடம் விளக்குகிறோம்.



தியாகராஜர் கல்லூரி 'நேச்சர் கிளப்' குழுவினர்.

மதுரை தெப்பகுளத்தை சுற்றி இரவு நேர பானிப் பூரி கடைகளில் சேரும் குப்பை தெருவெங்கும் கிடக்கிறது. இங்கு, நிரந்தர குப்பை தொட்டி அமைக்க வலியுறுத்தியுள்ளோம்.

மாநகராட்சியுடன் இணைந்தும் தூய்மை பணிகளில் ஈடுபடுகிறோம். ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்திக்கு நானும், என் மகனும் களிமண்ணில் விதை விநாயகர் செய்து வழிபடுவோம்.

அதே போல் இந்தாண்டும் 'ஹோம் மேட் விநாயகர்' செய்தோம். இப்படி செயற்கை வண்ணம் இல்லாத விநாயகரை நீர்நிலைகளில் கரைக்கும் போது சுற்றச்சூழல் பாதிக்காது. வைகையில் அழகர் இறங்க அமைக்கப்படும் தற்காலிக தொட்டி போன்ற அமைப்பை விநாயகர் சிலை கரைக்கும் இடத்திலும் அமைக்கலாம் என்றார்.

தினமலர்
DINAMALAR
20-09-2018 பக்கம் எண்: 18

# சுற்றுலா தின விழிப்புணர்வு

மதுரை, செப். 20 –

மதுரையில் செப்., 27, 28 ல் உலக சுற்றுலா தின விழா இரு நாட்கள் நடக்கிறது.

இதையொட்டி சுற்றுலாத்துறை சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடக்கின்றன. கடந்த வாரம் திருமலை நாயக்கர் மகாலில் துாய்மைப்பணி, பள்ளி மாணவர்களுக்கான ஓவிய போட்டிகள் நடந்தன.

நேற்று காந்திமியூசியத்தில் துாய்மைப்பணி மற்றும் விழிப்புணர்வு முகாம் நடந்தது. உதவி கலெக்டர் (பயிற்சி) பிரவீன் குமார் துவக்கி வைத்தார். தியாகராஜர் கலைக் கல்லுாரி மாணவர்கள் பங்கேற்றனர்.

'சுவாட்ச் பக்வாடா' திட்டத்தில் காந்திமியூசியத்திற்கு 2 ஸ்டீல் குப்பை தொட்டி, அரசு மியூசியத்திற்கு ஒன்றும் வழங்கப்பட்டன. சுற்றுலா அலுவலர் ஸ்ரீபாலமுருகன், அரசு மியூசியம் காப்பாட்சியர் பெரியசாமி மற்றும் நிர்வாகிகள் பெரியசாமி, நந்தாராவ், தானம் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் பாரதி பங்கேற்றனர்.

www.dinamani.com

**27-09-2018**

# புற்றுநோயாளிகளுக்கு வலியைக் கட்டுப்படுத்த இசை சிகிச்சை

மதுரை, செப். 26: மதுரை அரசு மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு இசை சிகிச்சை மூலம் வலியை கட்டுப்படுத்தும் புதிய சிகிச்சை முறை புதன்கிழமை தொடக்கப்பட்டது.

சென்னையை தலைமையிடமாக கொண்டு அஸ்வின் மகராஜ் அறக்கட்டளை சார்பில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இசை சிகிச்சை மூலம் வலியை கட்டுப்படுத்தி மன நிம்மதி அளிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளில் இந்த சிகிச்சை முறையை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் மதுரை அரசு மருத்துவமனையில் உள்ள புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் புதன்கிழமை இசையின் மூலம் நோயாளிகளை மகிழ்விக்கும் நிகழ்ச்சியை மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியை மதுரை அரசு மருத்துவமனை முதல்வர் டி.மருதுபாண்டியன் தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிர்வாகிகளோடு அமெரிக்கன் கல்லூரி, மதுரைக் கல்லூரி மற்றும் தியாகராசர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களும் இணைந்து கொண்டனர்.

## மதுரை அரசு மருத்துவமனையில் அறிமுகம்



மதுரை அரசு மருத்துவமனையில் புற்றுநோயாளிகளுக்கு இசை சிகிச்சை அளிக்கும் நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள்.

இதில் மாணவ, மாணவிகள் தனியாகவும், குழுவாகவும் இணைந்து பாடல்களை பாடினர். மேலும் புல்லாங்குழல் உள்ளிட்ட இசைக் கருவிகளையும் இசைத்து நோயாளிகளை மகிழ்வித்தனர்.

இந்த புதிய முயற்சி தொடர்பாக அஸ்வின் மகராஜ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் மனோன்மணி கூறியது: வெளிநாடுகளில் மியூசிக் தெரபி என்ற பெயரில் இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இசையின் மூலம் புற்றுநோயை கட்டுப்படுத்தும் முயற்சியை இந்தியாவிலுள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளில் மேற்கொண்டு வருகிறோம்.

புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ், அகமதாபாத்தில் உள்ள குஜராத் மருத்துவமனை, பெங்களூருவில் உள்ள கித்வாய் புற்றுநோய் சிகிச்சை மையம், கோயம்புத்தூர் [illegible] சிறப்புச் மருத்துவமனை, புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, சென்னை அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஹைதராபாத்தில் உள்ள எம்என்ஜே புற்றுநோய் ஆராய்ச்சி மையம் போன்றவற்றில் இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இசைக்கு நோயை கட்டுப்படுத்தி மன அமைதி ஏற்படுத்தும் தன்மை உண்டு.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை பாடல்கள் மற்றும் இசையை நேரடியாக கேட்கவைப்பதன் மூலமாக புற்றுநோயைக் கட்டுப்படுத்தி வலியை குறைக்க முடியும். அத்துடன் அவர்களது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள உணவுகளையும் நாங்கள் வழங்கி வருகிறோம். தற்போது மதுரை அரசு மருத்துவமனையில் வாரந்தோறும் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் மாலை 4 மணிக்கு இசை சிகிச்சை முறையை வழங்கவிருக்கிறோம் என்றார். இதில் அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் (பொ) எம்.சண்முகசுந்தரம், புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுத் தலைவர் ராஜசேகர் மற்றும் மருத்துவர்கள் பங்கேற்றனர்.

## மகனின் நினைவாக விழிப்புணர்வு நிகழ்ச்சி

அஸ்வின் மகராஜ் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்கள் ராமசுப்ரமணியன், அவரது மனைவி மனோன்மணியும். இவர்களது மகன் அஸ்வின்(22). இவர் சட்டப்படிப்பு படித்துக்கொண்டிருந்தபோது புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு புற்றுநோயாளிகளுக்கு வலியை கட்டுப்படுத்த இசை சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அஸ்வினுக்கு புற்றுநோய் முற்றிய நிலையில் இருந்ததால் அவரை காப்பாற்ற இயலவில்லை. இதில் அஸ்வின் இறக்கும் தருவாயில் புற்றுநோயாளிகளுக்கு இசை சிகிச்சை மூலம் வலியை குறைப்பதற்கான விழிப்புணர்வை தனது நினைவாக செய்ய வேண்டும் என்று பெற்றோரிடம் கேட்டுக்கொண்டுள்ளார். இதையடுத்து மகன் அஸ்வின் நினைவாக அஸ்வின் மகராஜ் என்ற பெயரில் அறக்கட்டளையை தொடங்கி இசை சிகிச்சையை செய்து வருகின்றனர்.

தினமலர்
DINAMALAR
04-10-2018 பக்கம் எண்: 10

## என் பார்வை

செவ்வாய் - வியாழன்

வேண்டும். கல்விக் கண் திறக்கும் ஆசிரியர் மனம் புண்படும் வகையில் நடப்பது நல்லதல்ல என்பதனை பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.

### அற்புதமான ஆசிரியர் பணி

நம்மிடம் படிக்கும் மாணவர்கள் அனைவரும் நம் குழந்தைகள் போலத் தான் என்ற எண்ணம் ஒவ்வொரு ஆசிரியர் மனதிலும் ஆணித்தரமாக பதிந்து இருக்க வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்களுக்கு அடிமை அல்ல. அதனால், அவர்களை வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்துவது போன்ற செயல்களை செய்யக் கூடாது. ஒவ்வொரு ஆசிரியரும் நடந்து கொள்ளும் விதத்தில் தான் அவர்களுக்கான மரியாதை அடங்கி உள்ளது. ஆசிரியரின் உடையில் நேர்த்தியும், பேசும் வார்த்தைகளில் கண்ணியமும் இருக்க வேண்டும்.

ஆசிரியரின் ஒவ்வொரு நடவடிக்கையும் மாணவர்களால் உற்றுநோக்கப்படும் என்பது அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு ஏற்ப ஆசிரியர்கள் முன் உதாரணமாக திகழ வேண்டும். ஆசிரியப் பணி ஓர் அற்புதமான பணி.

ஒரு சிறந்த ஆசிரியர் மாணவருக்கு ஏற்றி விடும் ஏணியாக இருக்க வேண்டும். ஏணியே ஆணியாக மாறி அவர்களை காயப்படுத்தி விடக்கூடாது. ஆசிரியர் என்பவர் தீப்பந்தத்தை போல தன்னை சுற்றி உள்ள மாணவர்களுக்கு வெளிச்சத்தை மட்டுமே தர வேண்டும். அதை விட்டுவிட்டு வெப்பத்தை கொடுத்து மாணவர்களிடம் இருந்து வெறுப்பை சம்பாதிக்க கூடாது.

சமுதாய அக்கறையோடும், பொறுப்புணர்வோடும் செயல்படும் ஆசிரியர்களோடு இணைந்து மாணவர் சமுதாயத்தை நல்வழிப் படுத்தும் பொறுப்பு பெற்றோர்களுக்கும், இன்றைய ஊடகங்களுக்கும் உள்ளது. பொறுப்பான இந்திய குடிமகனை உருவாக்குவது ஒவ்வொரு ஆசிரியர் கையிலும் இருக்கிறது.



**- கே.பிரவீணா**
**பேராசிரியை**
**தியாகராஜர் கல்லூரி, மதுரை**
praveena52@gmail.com

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
**07-10-2018** பக்கம் எண்: 3

போக்ஸோ சட்டத்தின் கீழ்

# பாலியல் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை

● கல்லூரி கருத்தரங்கில் தகவல்

■ மதுரை

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்கவும், குழந்தைகளை பயன்படுத்தி பொய் புகார் அளிப்பவர்களுக்கு தண்டனை வழங்கவும் போக்ஸோ சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது எனக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

மதுரை தியாகராஜர் கல்லூரி என்.எஸ்.எஸ். முகாமில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் டி.பாண்டியராஜா தலைமை வகித்தார். என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் அருணா வரவேற்றார்.

இதில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் போக்ஸோ சட்டம் குறித்து உயர் நீதிமன்ற கிளை மூத்த வழக்கறிஞர் கு.சாமிதுரை பேசியதாவது: பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்ஸோ சட்டம் 2012-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

காஷ்மீரில் ஆசிஃபா என்ற சிறுமி பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட பிறகு, 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாலியல் வல்லுறவு செய்பவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்குமாறு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 11 வயது மாற்றுத் திறனாளி சிறுமியை பாலியல் கொடுமைக்கு உட்படுத்திய 17 பேரில் 6 பேர் 60 வயதைக் கடந்தவர்கள். குழந்தைகளுக்கு நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் எது என்பதை கற்பிக்க வேண்டும். தவறான கண்ணோட்டத்துடன் தொடுபவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படும்.

குழந்தைகளை ஆபாசன நடவடிக்கையில் இருந்து தப்பிக்க வைத்தல், குழந்தை பாலியல் தாக்குதலில் இருந்து தப்பிக்க வைப்பது ஆகியவற்றை சட்டம் வலியுறுத்துகிறது.

குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய காவல் நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், காப்பகங்களில் குழந்தைகளுக்கு எதிராக நடப்பவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்க முடியும். பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் வழக்கறிஞர்கள் தடிப்பான கேள்விகள் கேட்கக்கூடாது. மழலை மொழியிலேயே வாக்குமூலங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த நாளில் இருந்து 30 நாளில் சாட்சி விசாரணையை தொடங்க வேண்டும். ஒரு ஆண்டில் வழக்கை முடிக்க வேண்டும் என சட்டத்தில் பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இழப்பீடு வழங்கவும், குழந்தைகளைப் பயன்படுத்தி பொய் புகார் அளிப்பவர்களுக்கு ஒரு ஆண்டு தண்டனை வழங்கவும் சட்டத்தில் இடம் உள்ளது என்றார்.


▲ மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசினார் வழக்கறிஞர் கு.சாமிதுரை.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**08-10-2018** பக்கம் எண்: **15**



பாலியல் தொந்தரவால் பாதிக்கப்பட்ட

# குழந்தைகளிடம் வக்கீல்கள் கடுமையான கேள்விகள் கேட்க கூடாது

## கருத்தரங்கில் வலியுறுத்தல்

மதுரை, அக்.8–

மதுரை தியாகராஜர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட முகாமில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது தொடர்பான கருத்தரங்கு நடந்தது. கல்லூரி முதல்வர் பாண்டியராஜா தலைமை தாங்கினார். என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் அருணா வரவேற்றார். இதில், மதுரை ஐகோர்ட்டு மூத்த வக்கீல் கு.சாமிதுரை கலந்து கொண்டு பேசியதாவது:–

கடந்த 2012–ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சென்னையில் 11 வயது மாற்றுத்திறனாளி சிறுமியை பாலியல் கொடுமைக்கு உட்படுத்திய 17 பேரில் 6 பேர் 60 வயதை தாண்டியவர்கள். குழந்தைகளுக்கு நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் எது என்பதை கற்பிக்க வேண்டும். தவறான கண்ணோட்டத்துடன் தொடுபவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்படும்.

காஷ்மீரில் சிறுமி பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்துக்கு பிறகு 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பாலியல் துன்புறுத்தல் செய்பவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கும்படி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டிய போலீஸ் நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், காப்பகங்களில் குழந்தைகளுக்கு எதிராக நடப்பவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்க முடியும். பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் வக்கீல்கள் கடுமையான கேள்விகள் கேட்க கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

தினமணி
www.dinamani.com
21-10-2018 பக்கம் எண்: 2

# சைவ சித்தாந்த இலவச வகுப்பில் சேர விண்ணப்பங்கள் வரவேற்பு

மதுரை, அக். 20: மதுரை தியாகராஜர் கல்லூரியில் நவம்பர் 25 ஆம் தேதி தொடங்க உள்ள சைவ சித்தாந்த இலவச வகுப்புகளில் சேர விரும்புவோர், விண்ணப்பங்களை அனுப்பலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தியாகராஜர் கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: தியாகராஜர் கல்லூரியில் கடந்த 14 ஆண்டுகளாக நவம்பர் மாதத்தில் இலவச சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 10 நாள்கள் நடைபெறும் இந்த வகுப்புகள், நடப்பாண்டில் நவம்பர் 25 ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் 4 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

பொது வகுப்பு, சிறப்பு வகுப்பு என நடைபெறும் இந்த வகுப்புளில் சேர்ந்து பயில கட்டணம் ஏதும் கிடையாது. பயிற்சியாளர்களுக்குரிய இலவச உணவு, உறைவிடம் ஆகியனவும் கல்லூரி நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது வகுப்பில் சிவஞான போதம், திருவருள்பயன், உண்மை விளக்கம் ஆகியன கற்றுத் தரப்படும். சிறப்பு வகுப்பில் சிவஞான போத சிற்றுரை விளக்கம், ஞானாமிர்தம், சிவப்பிரகாசம், திருக்களிற்றுப்படியார், கொடிக்கவி ஆகியன கற்றுத் தரப்படும்.

பயிற்சி வகுப்புகளுக்குரிய விண்ணப்பங்களை, கல்லூரி அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். கல்லூரி இணையதளத்திலிருந்தும் (www.tcarts.in) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் கல்லூரி முதல்வருக்கு கிடைக்கும் வகையில் அனுப்பிடவேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமணி
www.dinamani.com
25-10-2018 பக்கம் எண்: 3

# மதுரையில் 8 நூல்கள் வெளியீட்டு விழா

மதுரை, அக். 24: மதுரையில் இலக்கியம், கவிதை, கட்டுரை, பயணம் என 8 நூல்கள் வெளியீட்டு விழா புதன்கிழமை நடைபெற்றது.

மதுரை காலேஜ்ஹவுஸ் வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரி சி.மணிவளன் தலைமை வகித்தார். உலகத்திருக்குறள் பேரவை மதிப்புறு தலைவர் கார்த்திக் மணிமொழியன் முன்னிலைவகித்தார். தியாகராஜர் கல்லூரிச் செயலர் கருமுத்து க.ஹரிதியாகராஜன் சிறப்புரையாற்றினார். வானதி ராமநாதன், புரட்சிக் கவிஞர் மன்றம் தலைவர் பி.வரதராஜன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.



மதுரையில் புதன்கிழமை நடைபெற்ற 8 நூல்கள் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற (இடமிருந்து) பேராசிரியர்கள் நிர்மலாமோகன், ரா.மோகன், ஹரிதியாகராஜன், தலைமைக்குற்றவியல் நடுவர் இல.செ.சத்தியமூர்த்தி, திருப்பூர் கிருஷ்ணன், சி.மணிவளன், எழுத்தாளர் இந்திராசௌந்தரராஜன் உள்ளிட்டோர்.

நிகழ்ச்சியில் பானுமதி தருமராசனின் வரலாறு படைத்த வைர மங்கையர், கே.ஜி.ராஜேந்திரபாபுவின் முயற்சியுடையார் வளர்ச்சி அடையார், அ.கோவிந்தராஜுவின் கண்டேன் கனடா, ரா.ரவியின் கவிச்சுவை, லி.ஜன்னத்தின் சாலை இளந்திரையன் படைப்புலகம், மு.தருமராசனின் சமுதாயச் சாளரம் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

விழாவில் திருப்பூர் கிருஷ்ணன், பேராசிரியர்கள் ரா.மோகன், நிர்மலாமோகன், மு.அருணகிரி, எழுத்தாளர் இந்திராசௌந்தரராஜன், மதுரை தலைமைக் குற்றவியல் நடுவர் இல.செ.சத்தியமூர்த்தி, ஆசிரியர் ஞா.சந்திரன், பேராசிரியர் ராஜாகோவிந்தசாமி, சிஇஓஏ பள்ளி தலைவர் மை.ராசாகிளைமாக்சு, ரா.ராமசாமி உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர்.

நூல்களின் முதல்படிகளை சசிகலா குமாரநாத், கா.கருப்பையா, கி.சங்கீத்ராதா, பெ.ஜெயராம், திருச்சி சந்தர், உதவிப் பேராசிரியர் மூ.செந்தில்குமார், க.ராஜேந்திரன், மு.அழகுராஜ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியை பேச்சாளர் ச.திருநாவுக்கரசு தொகுத்து வழங்கினார். முன்னதாக ரா.முத்து இளங்கோவன் வரவேற்றார். நிர்மலா மோகன் நன்றி கூறினார்.

தினமலர்
DINAMALAR
25-10-2018 பக்கம் எண்: 1



மதுரையில் நடந்த எட்டு நூல்கள் வெளியீட்டு விழாவில் தலைமை குற்றவியல் நீதிபதி சத்தியமூர்த்தி பேசினார். இடமிருந்து தியாகராஜர் கல்லூரி செயலர் ஹரி தியாகராஜன், பேராசிரியர் இரா.மோகன், எழுத்தாளர் திருப்பூர் கிருஷ்ணன், பாதிரியார் மணிவளன், எழுத்தாளர் இந்திரா சவுந்தர்ராஜன்.

# தமிழர்களின் புகுந்த வீடு கனடா

## நீதிபதி பேச்சு

**மதுரை, அக். 25 –**

மதுரை உலக திருக்குறள் பேரவை, எழுத்தாளர்கள் சார்பில் எட்டு நூல்களின் வெளியீட்டு விழா நடந்தது.

தலைமை குற்றவியல் நீதிபதி சத்தியமூர்த்தி கவிஞர் கோவிந்தராஜனின் 'கண்டேன் கனடா' நூல் குறித்து பேசியதாவது: தமிழுக்கும் தமிழர்களுக்கும் புகுந்த வீடாக திகழும் கனடா நாட்டின் அரசியல், வறுமை குறித்து பல தவகல்கள் இந்நூலில் உள்ளது.

கனடாவில் தமிழ் உச்சரிப்பு, தமிழ் நிகழ்வுகளின் சிறப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் திரைகடல் ஓடி தேடிய செல்வம் என்றார்.

பானுமதி, இரா. மோகன், நிர்மலா மோகன், ராஜேந்திர பாபு, இரா.ரவி, ஜின்னத் எழுதிய நூல்களுக்கு திருப்பூர் கிருஷ்ணன், பேராசிரியர் அருணகிரி, எழுத்தாளர் இந்திரா சவுந்தர்ராஜன், ஆசிரியர் சந்திரன், மன்னர் திருமலை நாயக்கர் தன்னாட்சி கல்லூரி இயக்குனர் ராஜா கோவிந்தசாமி, சி.இ.ஓ.ஏ.பள்ளி தலைவர் ராஜா கிளைமாக்ஸ் கருத்துரை வழங்கினர்.

தியாகராஜர் கல்லூரி செயலாளர் ஹரி தியாகராஜன், பாதிரியார் மணிவளன், வானதி பதிப்பகம் ராமநாதன், பொதுப் பணித்துறை அலுவலர் (ஓய்வு) சசிகலா, உலக திருக்குறள் பேரவை மதிப்புறு தலைவர் கார்த்திக், முத்தமிழ் அறக்கட்டளை நிறுவனர் திருச்சி சந்தர் பங்கேற்றனர்.

தினமலர்
DINAMALAR

**27-10-2018** பக்கம் எண்: **1**

## விழிப்புணர்வு

**மதுரை, அக். 27 –**

மதுரை தியாகராஜர் கல்லூரியில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் சார்பில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது. பேராசிரியர் சீனிவாசன் வரவேற்றார். இன்சூரன்ஸ் நிறுவன முதன்மை மண்டல மேலாளர் ரங்கராஜன், கல்லூரி செயலாளர் தியாகராஜன், முதல்வர் பாண்டியராஜா, பட்டிமன்ற பேச்சாளர் ராஜா, மாணவர்கள் பங்கேற்றனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
01-11-2018 பக்கம் எண்: 4

# மாணவர்களுக்கு ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு போட்டி

## ● 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி இணைந்து ஏற்பாடு

■ மதுரை

மதுரையில் 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வார விழாவையொட்டி 'தி இந்து' நாளிதழ், என்எல்சி லிக்னைட் நிறுவனமும் இணைந்து 3 பிரிவுகளில் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஓவியம், கேலிச் சித்திரம், கவிதைப் போட்டிகளை நடத்தின.

3-ம் வகுப்பு முதல் 6-ம் வகுப்பு வரையிலான மாணவ- மாணவியர் ஓவியப் போட்டியிலும், 7-ம் வகுப்பு முதல் 10-ம் வரையிலான மாணவ, மாணவியர் கேலிச் சித்திரம் வரைதல் போட்டியிலும் பங்கேற்றனர்.

6வகுப்பு முதல் 8ம் வகுப்பு மாணவர்கள் கவிதைப் போட்டியில் பங்கேற்றனர். ஆர்வமுள்ள மாணவ, மாணவியர் வீட்டில் இருந்தபடியே ஓவியம், கேலிச் சித்திரங்களை வரைந்து அனுப்பினர். போனில் கவிதைப் போட்டி நடந்தது. சுமார் 500-க்கும் மேற்பட்ட ஓவியம், கேலிச் சித்தரம் மற்றும் கவிதைகள் வரப்பெற்றன. மாநகராட்சி இளங்கோ மேல்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் ஜி. திருப்பதிராஜ், அல்அமீன் மேல்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியர் பி. சண்முக சுந்தரம் ஆகியோர் நடுவர்களாக இருந்து சிறந்த படைப்புகளை தேர்வு செய்தனர். இதன்படி, ஓவியப் போட்டியில் சிவகாசி லயன்ஸ் மெட்ரிக் பள்ளி மாணவி ஏ. தனிசா முதலிடம், மதுரை மகாத்மா மாண்டிசோரி பள்ளி மாணவி ஆர். ஸ்ரீஹரணி 2-வது இடமும், மகாத்மா குளோபல் கேட்வே பள்ளி மாணவி ஏ. அனுகீர்த்தனா 3-வது இடம் பெற்றனர். கேலிச் சித்திரத்தில் ராஜபாளையம் ரமண வித்யாலயா பள்ளி மாணவி என். விஷ்ணு பிரியதர்ஷனி முதலிடம், கம்பம் ராம்ஜெயம் வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி மாணவி ஜே.ஆரிஷா 2-வது இடம், வில்லாபுரம் ராஜன் மெட்ரிக் பள்ளி மாணவி என்எஸ். விசாலி 3-வது இடமும் பெற்றனர்.

கவிதைப் போட்டி: மதுரை வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவர் ஏ.அக்னேஷ் முதலிடம், ராஜபாளையம் ஸ்ரீரமண வித்யாலயா பள்ளி மாணவி ரக்ஷயா 2-ம் இடம், திண்டுக்கல் சவுந்திரராஜா வித்யாலயா பள்ளி மாணவி ஜனோபர் 3-ம் இடம் பிடித்தனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா மதுரை 'தி இந்து' நாளிதழ் அலுவலகத்தில் நடந்தது. தியாகராசர் கலைக்கல்லூரி முதல்வர் டி. பாண்டியராஜா, என்எல்சி நிறுவன கூடுதல் துணை பொது மேலாளர் ஆர்.மோகன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். ஒவ்வொரு போட்டியிலும் தலா 7 பேருக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. ஓவியர் ஆசிரியர்கள் சண்முகசுந்தரம், திருப்பதி ராஜ் மற்றும் மாணவ, மாணவியர் பெற்றோர் பங்கேற்றனர்.



▲ மதுரையில் 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி நிறுவனம் இணைந்து நடத்திய ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நடந்த பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள். படம்: ஆர். அசோக்

VIGILANCE AWARENESS WEEK - 2018
29th October to 3rd November

# மாணவர்களுக்கு ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு போட்டி

## ● 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி இணைந்து ஏற்பாடு

■ மதுரை

மதுரையில் 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வார விழாவையொட்டி 'தி இந்து' நாளிதழ், என்எல்சி லிக்னைட் நிறுவனமும் இணைந்து 3 பிரிவுகளில் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஓவியம், கேலிச் சித்திரம், கவிதைப் போட்டிகளை நடத்தின.

3-ம் வகுப்பு முதல் 6-ம் வகுப்பு வரையிலான மாணவ- மாணவியர் ஓவியப் போட்டியிலும், 7-ம் வகுப்பு முதல் 10-ம் வரையிலான மாணவ, மாணவியர் கேலிச் சித்திரம் வரைதல் போட்டியிலும் பங்கேற்றனர்.

6வகுப்பு முதல் 8ம் வகுப்பு மாணவர்கள் கவிதைப் போட்டியில் பங்கேற்றனர். ஆர்வமுள்ள மாணவ, மாணவியர் வீட்டில் இருந்தபடியே ஓவியம், கேலிச் சித்திரங்களை வரைந்து அனுப்பினர். போனில் கவிதைப் போட்டி நடந்தது. சுமார் 500-க்கும் மேற்பட்ட ஓவியம், கேலிச் சித்தரம் மற்றும் கவிதைகள் வரப்பெற்றன. மாநகராட்சி இளங்கோ மேல்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் ஜி. திருப்பதிராஜ், அல்அமீன் மேல்நிலைப்பள்ளி ஓவிய ஆசிரியர் பி. சண்முக சுந்தரம் ஆகியோர் நடுவர்களாக இருந்து சிறந்த படைப்புகளை தேர்வு செய்தனர். இதன்படி, ஓவியப் போட்டியில் சிவகாசி லயன்ஸ் மெட்ரிக் பள்ளி மாணவி ஏ. தனிசா முதலிடம், மதுரை மகாத்மா மாண்டிசோரி பள்ளி மாணவி ஆர். ஸ்ரீஹரணி 2-வது இடமும், மகாத்மா குளோபல் கேட்வே பள்ளி மாணவி ஏ. அனுகீர்த்தனா 3-வது இடம் பெற்றனர். கேலிச் சித்திரத்தில் ராஜபாளையம் ரமண வித்யாலயா பள்ளி மாணவி என். விஷ்ணு பிரியதர்ஷினி முதலிடம், கம்பம் ராம்ஜெயம் வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி மாணவி ஜே.ஆரிஷா 2-வது இடம், வில்லாபுரம் ராஜன் மெட்ரிக் பள்ளி மாணவி என்எஸ். விசாலி 3-வது இடமும் பெற்றனர்.

கவிதைப் போட்டி: மதுரை வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவர் ஏ.அக்னேஷ் முதலிடம், ராஜபாளையம் ஸ்ரீரமண வித்யாலயா பள்ளி மாணவி ரக்ஷயா 2-ம் இடம், திண்டுக்கல் சவுந்திரராஜா வித்யாலயா பள்ளி மாணவி ஜனோபர் 3-ம் இடம் பிடித்தனர்.

இவர்களுக்கான பரிசளிப்பு விழா மதுரை 'தி இந்து' நாளிதழ் அலுவலகத்தில் நடந்தது. தியாகராசர் கலைக்கல்லூரி முதல்வர் டி. பாண்டியராஜா, என்எல்சி நிறுவன கூடுதல் துணை பொது மேலாளர் ஆர்.மோகன் ஆகியோர் பரிசுகளை வழங்கினர். ஒவ்வொரு போட்டியிலும் தலா 7 பேருக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. ஓவியர் ஆசிரியர்கள் சண்முகசுந்தரம், திருப்பதிராஜ் மற்றும் மாணவ, மாணவியர் பெற்றோர் பங்கேற்றனர்.



▲ மதுரையில் 'தி இந்து' நாளிதழ் - என்எல்சி நிறுவனம் இணைந்து நடத்திய ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நடந்த பரிசு வழங்கும் விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள்.

படம்: ஆர். அசோக்

VIGILANCE AWARENESS WEEK - 2018
29th October to 3rd November

சத்துணவு ஊழியர்கள்

THE NEW INDIAN EXPRESS

02-11-2018 Page No : 3



## Talk on anti-corruption

Thiagarajar College of Arts and United India Insurance jointly organised a talk on anti-corruption as part of Vigilance Awareness Week. Pattimandram S Raja was the guest of honour.

THE NEW INDIAN EXPRESS

**04-12-2018** **Page No : 16**



தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
05-12-2018 பக்கம் எண்: 3

நன்னெறிக் கதைகள் மூலம்

# வழிபாட்டு முறைகளை குழந்தைகளுக்கு சொல்லித்தர வேண்டும்

## தியாகராசர் கல்லூரிச் செயலர் பேச்சு

மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் 15-ம் ஆண்டு சைவ சித்தாந்தப் பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது. விழாவில் அக்கல்லூரிச் செயலாளர் கே. ஹரி தியாகராஜன் வாழ்த்திப் பேசியது:

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன், எனது பாட்டியார் ராதா தியாகராஜன் விதைத்த விதை, ஆலமரம் போல் பரந்து தற்போது வளர்ந்துள்ளது.

இதில் பயிற்சி பெற்ற 4 பேர் மேடையில் பேசும்போது, பயிற்சியின் சாராம்சத்தை பிழிந்து கொடுத்ததுபோல இருந்தது. இன்றைக்கு சைவ சித்தாந்தம் படித்த ஆசிரியர்களை பார்ப்பது அறிது. அப்படியே இருந்தாலும் எவ்வளவு பணம் கொடுப்பீர்கள் எனக் கேட்கும் சூழல் உள்ளது.

சைவ சித்தாந்தம் படிப்பவர்களும் குறைவு. இதுபோன்ற சூழலில்தான் சைவ சமயக் கோட்பாடுகளை பரப்பும் நோக்கில் 15 ஆண்டுகளாக இந்த பயிற்சி முகாமை நடத்தி வருகிறோம்.

நமது வழிபாட்டு முறைகளை குழந்தைகளுக்கு நல்ல கதைகள் மூலம் சொல்லிக் கொடுத்து நம்பிக்கையை வளர்க்க வேண்டும். இப்பயிற்சி மூலம் சிறிய கோட்பாடுகளைச் சொல்லித் தர முயற்சித்துள்ளோம். எதிர்காலத்தில் ஏராளமானோர் இந்த பயிற்சியைப் பெற வேண்டும் என்பதே எங்களது விருப்பம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையச் செயலர் ஜே. மோகன் பேசும்போது, இக்கல்லூரி ஐந்தாம் தமிழ்ச் சங்கம். அவ்வை துரைசாமி, இலக்குவனார் போன்ற சிறந்த பேராசிரியர்கள், கவிஞர்கள், அரசியல் தலைவர்களை உருவாக்கிய தவச்சாலை. சென்னையில் இதுபோன்ற பயிற்சியை நடத்த ஏற்பாடு செய்தால் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளோம்," என்றார்.

விழாவில் பயிற்சி பெற்றவர்களுக்கு கல்லூரிச் செயலர் கே. ஹரி தியாகராஜன், ஜே. மோகன் சான்றிதழ்களை வழங்கினர்.

கல்லூரி முதல்வர் டி. பாண்டிய ராஜா, தமிழ்த்துறை தலைவர் மலர்விழி மங்கையர்கரசி, முன்னாள் பேராசிரியர்கள், சைவ சித்தாந்த பயிற்சியாளர்களான மாணிக்கம், அருணகிரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்..



▲ விழாவில் சைவ சித்தாந்த பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய கல்லூரிச் செயலாளர் ஹரி தியாகராஜன், சேக்கிழார் ஆய்வு மையத் தலைவர் ஜே. மோகன்.

THE NEW INDIAN EXPRESS

06-12-2018 Page No : 4

# Aero-modelling contest held

EXPRESS NEWS SERVICE @Madurai

FLYATION 2018, a first of its kind inter-school aero-modelling competition, was held at the Thiagarajar College of Arts and Science, on Wednesday.

More than 1000 students from about 50 schools in the district took part in the extravagant science contest that aimed at involving students in experiential learning.

Ganeshan TN, CEO, Stem Xplorers, which is organising the event in association with the college said, "We had visited around 50 schools in Madurai in the past four to five months to teach students about the basics of aeromodelling, in a practical manner.

The whole idea was to let them know that textbook science can be applied in daily lives to create solutions for different problems. Once they get experimental with science, students become innovative and understand the subject better. This event is where their learning will be put to test in a fun way."



The students participating in the competition at Thiagarajar College | EXPRESS

Aeromodelling kits were provided to the students participating in the Technical paper plying, Smart bird glider, Chuck glider and Bottle rocket contests held in junior and senior categories. Apart from this, a display of science projects under both the categories was also held.

THE NEW INDIAN EXPRESS

07-12-2018 Page No : 4

# Kindling young minds to create and explore!



50 schools from the district took part in Flyation 2018 ● KK Sundar

● **Express Features**

Experiential learning and creativity to groom hands-on skills were at its best at the Flyation 2018 held in the Thiagarajar College of Arts and Science on Wednesday, in association with The New Indian Express. More than 1,000 students from the district took part in the inter-school aeromodelling event that brought to fore young talents interested in science.

Six months ago, Stem Xplorers, one of the organisers who specialise in providing practical learning experiences in schools, started visiting schools in Madurai to interact with students. Months later, the idea of conducting a competition to put their skills to test was conceived and thus Flyation 2018 came to fruition.

About 50 schools from the district took part in the event that had competitions under two categories: juniors (class 5-6) and seniors (class 7-9). In all, there were five different contests, namely technical paper plying, smart bird glider, chuck glider, bottle rocket and display of projects. The first four contests required students to create and present flying models, with the materials provided to them.

> **Science is something that every kid needs to learn practically. We are trying our best to make schools and students realise this.**
>
> —Ganeshan TN, CEO, STEM Xplorers

R V Matriculation Higher Secondary School, Melur, and Milton Matriculation Higher Secondary School, Melur, were overall winners in the senior and junior category respectively.

Ganeshan TN, CEO, Stem Xplorers, said, "Firstly, we should thank our media partner, Express group, as they helped us hold this event with grand success. I thank the Thiagarajar College management for providing us the venue free of cost to encourage students. We also look at this event as a tribute to late scientist and former president APJ Abdul Kalam, as aeromodelling was among Kalam's favourite subjects."

While distributing the prizes to the winners, Uma Kannan, Vice President of Thiagarajar Arts and Science College said, "Flyation 2018 is an opportunity for the students to design their career and I appreciate the young girls who came here to explore their talent." She further quoted A P J Abdul Kalam's motto, 'If you fail, never give up because fail means First Attempt in Learning', while narrating a story from Kalam's life. Also, she said that like Mathematics, which has several methods to derive a solution, everyone has a solution for their troubles.

தினமலர்
DINAMALAR
07-12-2018 பக்கம் எண்: 3

# டிச.9 மதுரையில் பாரதி, அவ்வை விழா

Pg:03

மதுரை, டிச. 7 –

மதுரை கம்பன் கழகம் சார்பில் ஒன்பதாம் ஆண்டு பாரதி விழா – அவ்வை விழா ஆண்டாள் புரம் வசுதாரா வளாகம் மீனாட்சி நிலையத்தில் டிச., 9ல் நடக்கிறது.

அன்று காலை 10:00 மணிக்கு பேச்சாளர் பாரதி பாஸ்கர் தலைமையில் 'அவ்வை முதல் ஆண்டாள் வரை' என்ற தலைப்பில் உரையரங்கம், காலை 11:30 மணிக்கு 'மகாகவி பாரதி விரும்பிய பெண் விடுதலை இன்றைக்கு கானல் நீரே... வான மழையே...' என்ற தலைப்பில் பேச்சாளர் ராஜா நடுவராக இடம் பெறும் பட்டிமன்றம் நடக்கிறது.

பேராசிரியை ரேவதி சுப்புலட்சுமி, அனுக்கிரகா, சண்முகம், மாது, தெய்வானை, கவிதா ஆகியோர் பேசுகின்றனர். பேராசிரியர்கள் தா.கு.சுப்பிரமணியன், ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மாலை 6:00 மணிக்கு கம்பன் கழகத் தலைவர் சங்கர சீத்தாராமன் தலைமையில் இசையரங்கம் நடக்கிறது. நிறுவனரும், பட்டிமன்ற நடுவருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா, தியாகராஜர் கல்லூரி செயலாளர் ஹரி தியாகராஜன், கழக செயலாளர் புருஷோத்தமன், பொருளாளர் சுந்தரம் பங்கேற்கின்றனர். இரவு 7:00 மணிக்கு இசை நிகழ்ச்சி நடக்கிறது. ஊடக உதவியை தினமலர் நாளிதழ் அளிக்கிறது.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**18-12-2018** பக்கம் எண்: **4**

# தியாகராசர் கல்லூரியில் நூல் வெளியீடு

**மதுரை**

மதுரை தியாகராசர் கலைக் கல்லூரி இருபது ஆண்டுகளுக்கும் மேலாக முதுகலை மாணவர்களுக்கான கருத்தரங்கம் நடத்துகிறது.

இந்த ஆண்டு முதன் முறையாக கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் நூலாக்கம் செய்து, 'கடம்பவனம் ' என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

கல்லூரி முதல்வர் து.பாண்டியராஜா நூலினை வெளியிட்டார். தமிழ்த் துறைத் தலைவர் ராம. மலர்விழி மங்கையர்க்கரசி நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

முதல்வர் பேசும்போது, எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும், ஆவணப்படுத்த வேண்டியது அவசியம். இந்த நூலானது பிற்காலத்தில் மேற்கோளாக ஆளப் பெறும்.

இதுபோன்ற முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார். பேராசிரியர் அ.மோகனா நன்றி கூறினார்.



▲ கடம்பவனம் நூலை தியாகராசர் கல்லூரி முதல்வர் பாண்டியராஜா வெளியிட பெற்றுக் கொண்டார் தமிழ்த் துறைத் தலைவர் ராம.மலர்விழி மங்கையர்க்கரசி.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
19-12-2018 பக்கம் எண்: 4

# போட்டித் தேர்வர்களுக்கு நேர்மறை சிந்தனை அவசியம்

## • பயிற்சி வகுப்பு தொடக்க விழாவில் அறிவுரை

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் படிக்கும் மாணவ, மாணவிகளிடம் ஐஏஎஸ் உட்பட அரசுப் பணிக்கான போட்டித்தேர்வை ஊக்கப்படுத்தும் வகையில் 1000 மாணவர்களுக்கு சமீபத்தில் நுழைவுத்தேர்வு நடந்தது. இதில் 72 பேர் தேர்வு செய்யப்பட்டு, இவர்களுக்கு இலவசமாக சிறப்புப் பயிற்சி வகுப்பு அளிக்க கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

கல்லூரி வளாகத்தில் நடந்த தொடக்க விழாவுக்குத் தலைமை வகித்து கல்லூரிச் செயலர் கருமுத்து க.தியாகராசன் பேசியதாவது: நீதி, நிர்வாகம் மற்றும் நாடாளுமன்றம் / சட்டமன்றம் ஆகியவை ஜனநாயகத்தை தாங்கும் மூன்று முக்கியத் தூண்கள். நிர்வாகத்துறைக்கு (ஆட்சிப்பணிகள்) நீங்கள் வர வேண்டும் என்பதை விரும்புகிறோம். சேவை மனப்பான்மை, தியாக உணர்வு குடிமைப்பணிக்கு முதன்மைத் தகுதிகள் என நான் கருதுகிறேன்.

ஊடகமே ஜனநாயகத்தின் குரலாக ஒலிக்கிறது. தேசத்தின் மனச்சாட்சியாக உள்ளது. ஜனநாயகத்தின் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக அது விளங்குகிறது. எனவே, நாள்தோறும் நாளிதழ்களைப் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள். இது நடப்பு நிகழ்வு குறித்த ஆழ்ந்த புரிதலை ஏற்படுத்தும்.

வாசிப்புப் பழக்கத்தைக் கைவிடாமல் தொடர வேண்டும். போட்டித் தேர்வர்கள் நேர்மறைச் சிந்தனையை வளர்த்துக்கொள்வதும் அவசியம். சிக்கல்களை எதிர்கொள்ளும் அணுகுமுறை, செயல்பாடுகளும் தேவை. இது போன்ற சிறந்த அணுகுமுறையே வெற்றியைத் தேடித்தரும். வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மதுரை மண்டல வேலை வாய்ப்பு இணை இயக்குநர் சந்திரன், மதுரை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் கருணாகரன், சென்னை ஸ்மார்ட் லீடர்ஸ் ஐஏஎஸ் அகாடமி நிறுவனர் சிவராஜவேல், கல்லூரி முதல்வர் பாண்டியராஜா ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.



▲ சிறப்புப் பயிற்சி வகுப்பு தொடக்க விழாவில் பேசிய தியாகராசர் கல்லூரிச் செயலர் க. தியாகராசன். அருகில் முதல்வர் பாண்டியராஜா, வேலைவாய்ப்புத் துறை அதிகாரிகள் சந்திரன், கருணாகரன். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**20-12-2018** பக்கம் எண்: 3



THE NEW INDIAN EXPRESS

**20-12-2018** **Page No : 1**



தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
20-12-2018 பக்கம் எண்: 3

# தியாகராசர் கல்லூரியில் ராமானுஜன் பிறந்த நாள் விழா

■ மதுரை

மதுரை தியாகராசர் கல்லூரியில் ஸ்ரீனிவாசா ராமானுஜனின் பிறந்த நாள் விழா நாளை (டிச.21) காலை 11 மணிக்கு கல்லூரி வளாகத்திலுள்ள தொல்காப்பியர் அரங்கில் நடக்கிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக கணிதத்துறை முன்னாள் பேராசிரியர் ஆர். பாஸ்கரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசுகிறார். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் டி. பாண்டிராஜா மற்றும் பேராசிரியர்கள் செய்துள்ளனர்.

DINAMALAR
20-12-2018 பக்கம் எண்: 3




மதுரையில் சி.ஐ.ஐ. சார்பில் நடந்த கல்லூரி முதல்வர்களுக்கான மாநாட்டில் குஜராத் பல்கலை துணைவேந்தர் ஹிமான்சு பாண்ட்யா பேசினார். இடமிருந்து வேலுார் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி துணை தலைவர் செல்வம், ஸ்ரீராமச்சந்திரா பல்கலை டீன் தியாகராஜன், சி.ஐ.ஐ., கன்வீனர் ஹரிதியாகராஜன், தலைவர் ராஜமோகன்.

# புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான கல்வி அவசியம்

## குஜராத் பல்கலை துணைவேந்தர் பேச்சு

**மதுரை, டிச. 20–**

"புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான கல்வி. மாணவர்களுக்கு தேவையாக உள்ளது," என குஜராத் பல்கலை துணைவேந்தர் ஹிமான்சு பாண்ட்யா பேசினார்.

மதுரையில் இந்திய தொழில் கூட்டமைப்பு(சி.ஐ.ஐ.,)சார்பில் கல்லூரி முதல்வர்களுக்கான மாநாடு நடந்தது. மண்டல தலைவர் ராஜமோகன் வரவேற்றார். மாநில கல்வி பிரிவு கன்வீனர் ஹரிதியாகராஜன் தலைமை வகித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணா பல்கலை டீன் தியாகராஜன், வேலுார் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி துணை தலைவர் செல்வம் பங்கேற்றனர்.

**அனைத்து துறைகளிலும் ஏற்பட்டு வரும் அபரிதமான வளர்ச்சிகளை அன்றாடம் ஆசிரியர்கள் அறிந்திருந்தால் தான் மாணவர்களுக்கு முறையாக கற்பிக்க முடியும்.**

குஜராத் பல்கலை துணைவேந்தர் ஹிமான்சு பாண்ட்யா பேசியதாவது:

கல்லுாரிகளுக்கு இடையிலான தகவல்தொடர்புகளை அதிகரிக்க வேண்டும். அதனால் பல வித வளர்ச்சிகளை பெறமுடியும். பல கல்லுாரிகள் போட்டி போட்டு ரேங்கிங் பெறுகிறார்கள். இக்கல்லுாரிகள் பின்தங்கிய கல்லுாரிகளின் ரேங்கிங் உயர வழிகாட்ட வேண்டும். அப்போது தான் அந்த கல்லுாரிகளில் படிக்கும் மாணவர்களும் பயன்பெறுவார்கள்.

மத்திய, மாநில அரசுகள் தற்போது உயர் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்கின்றன. ஆனால் அவை முறையாக பயன்படுத்தப்படுவது இல்லை. புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பான கல்வி இப்போது குறைவாக உள்ளது. இதனை அதிகரிக்க வேண்டும்.

அனைத்து துறைகளிலும் ஏற்பட்டு வரும் அபரிதமான வளர்ச்சிகளை அன்றாடம் ஆசிரியர்கள் அறிந்திருந்தால் தான் மாணவர்களுக்கு முறையாக கற்பிக்க முடியும். இரட்டைப் பட்டங்கள் பெறும் நடைமுறையால் இங்கும் வெளிநாடுகளில் உள்ள பட்டங்களை ஒரே நேரத்தில் பெறலாம்.

இதனால் மாணவர்கள் ஆர்வமாக படிப்பார்கள் என்றார்.

THE HINDU
20-12-2018 Page No : 2

THE HINDU 20-12-2018

# Call for networking of educational institutions across country

## It will benefit student community, says Gujarat University Vice-Chancellor

SPECIAL CORRESPONDENT
MADURAI

Gujarat University Vice-Chancellor Himanshu Pandya on Wednesday appealed to principals and heads of colleges and universities to promote networking among educational institutions as it would mutually benefit the institutions and the student community towards growth.

Speaking at the inaugural session of a principals conference organised by Confederation of Indian Industry (CII) here, he said a number of agencies were present at the national level to rank institutions on different parameters. There might be a number of questions revolving around the ranking such as whether it really helped institutions and students. But the ranking might bring in competition and enhance performance.

Hence, in a robust environment, it would be more beneficial for institutions to network and jointly submit proposals to UGC and Ministry of Human Resources & Development, which had plenty of funds to provide, he pointed out.

Dr. Pandya urged educational institutions to come together and devise degree programmes, be it within the country or with institutions in abroad.




**The right thing:** Himanshu Pandya, Vice-Chancellor, Gujarat University, addressing a principals conference in Madurai on Wednesday. • S. JAMES

By allowing students to pursue a dual degree, the students would not only get the much required exposure, but also understand about the changing trends and the requirements. There was no harm in introducing new syllabus by the educational institutions. Students should prepare depending on the need of society and not the other way round, he emphasised.

Former Madras University Vice-Chancellor S.P. Thiagarajan, in his address, correlated how the industrial revolutions in the past triggered educational institutions to prepare students. In a rapidly developing society, curricula might be designed as per the learners' ability. With technology around in aplenty, the best among them shall be put to use. For transforming the students in a new age era, teachers should also transform themselves, he underlined and summed up that good teachers were sole reasons for extraordinary students.

> It will be beneficial for institutions to network and jointly submit proposals to UGC and HRD Ministry, which has plent of funds
>
> HIMANSHU PANDYA
> Vice-Chancellor, Gujarat University

CII's Tamil Nadu Education Panel convenor Hari K. Thiagarajan, in his address, said there were 622 engineering colleges and 1,318 arts and science colleges in Tamil Nadu. However, taking a glance at the NIRF ranking showed that only 20 engineering colleges and 28 arts/science colleges were among the top 100 in the country. Every year, a whopping 1.1 lakh students graduated from these colleges in the State, but only 30% (35,000) of them were employable, he noted.

The institutions should focus on basics and look for the requirements ofi ndustry, which might help more students to get jobs.

Earlier, CII Madurai zone chairman S. Rajamohan welcomed the gathering.

VIT vice-president G.V. Selvam proposed a vote of thanks.

Technical sessions on student-faculty relationship: managing generation change, transformation in higher education: learning beyond the classroom, innovation and entrepreneurship development: role of institution in a changing world and a panel discussion on employability: expectations and challenges were conducted in which principals and heads of institutions from many colleges attended.

தி இந்து தமிழ் - 21.12.18 Pg: 04



▲ மதுரை வைகையாற்றில் நடைபெற்ற 'மெகா' தூய்மைப்பணியில் பங்கேற்று குப்பைகளை அகற்றிய கல்லூரி மாணவ, மாணவிகள். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி



▲ தூய்மைப்பணியின்போது தாங்கள் சேகரித்த குப்பைகளை சாக்குப் பையில் கொட்டிய மதுரை ஆட்சியர் எஸ்.நடராஜன், காவல்துறை ஆணையர் டேவிட்சன் தேவாசீர்வாதம், மாநகராட்சி ஆணையர் அனீஷ் சேகர். படம்: எஸ். ஜேம்ஸ்

# 'மெகா' தூய்மைப்பணியால் 44 கி.மீ. சுத்தமானது வைகை

## ● 9,500 கல்லூரி மாணவர்கள் உள்பட 25 ஆயிரம் பேர் பங்கேற்பு

■ மதுரை

மதுரை வைகை ஆற்றில் ஒரே நேரத்தில் கல்லூரி மாணவ, மாணவிகள் 9,500 பேர் உள்பட 25,000 பேர் பங்கேற்ற மெகா தூய்மைப்பணி நடைபெற்றது. இதில், 29 டன் குப்பைகள் அகற்றப்பட்டதால் வைகை ஆறே தூய்மையானது.

தமிழகத்தில் மதுரை மாவட்டமும், மாநகராட்சியும் சுகாதாரத்தில் பின்தங்கியுள்ளது. அதுவும், வைகை ஆறு குப்பையும், கழிவு நீரும் சேர்ந்து மதுரையின் கூவமாக மாறிவிட்டது. மதுரை மாநகராட்சியின் ஆணையராக அனீஷ் சேகர் பொறுப்பேற்ற பின், சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வைகை ஆற்றை தூய்மைப்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'ஸ்மார்ட் சிட்டி'யில் வைகை ஆற்றை மதுரையின் கலாச்சார மையமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறார். இதன் ஒரு பகுதியாக நேற்று காலை 7 மணி முதல் 11 மணி வரை மாநகராட்சி சார்பில் வைகை ஆற்றில் திருவேடகம் முதல் அங்காடிமங்கலம் வரையும், குரு தியேட்டர் காமராசர் பாலம் முதல் ஓபுளாபடித்துறை வரையும் மொத்தம் 44 கி.மீ. வரை கல்லூரி மாணவ, மாணவிகள் 9,500 பேர், சமூகத் தன்னார்வலர்கள், பொதுமக்கள் மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள் என மொத்தம் 25 ஆயிரம் பேர் பங்கேற்ற மெகா தூய்மைப்பணி நடைபெற்றது.



▲ உதவிப் பேராசிரியர் அருணா ராமச்சந்திரன்

குரு தியேட்டர் காமராசர் பாலம் முதல் ஓபுளாபடித்துறை வரையுள்ள 7 கிலோ மீட்டர் நீளமுள்ள வைகை ஆறு, 62 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் 400 நபர்கள் வீதம் தூய்மைப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். மாவட்ட ஆட்சியர் எஸ்.நடராஜன், மாநகராட்சி ஆணையர் அனீஷ் சேகர், காவல் ஆணையர் டேவிட்சன் தேவாசீர்வாதம், ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தூய்மைப்பணியில் ஈடுபட்ட மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

மாணவர்கள் வைகை ஆற்றில் காணப்பட்ட குப்பைகளை அகற்றி தரம் வாரியாகப் பிரித்து மூட்டைகளில் கட்டி, மாநகராட்சி லாரிகளில் ஏற்றி அனுப்பினர். நேற்று ஒரே நாளில் 29 டன் குப்பைகளை அகற்றியதால் வைகை ஆறு 44 கி.மீ. தூரம் தூய்மையானது.

இந்தத் தூய்மைப்பணிக்கு மாணவர்களை அழைத்து வந்த தியாகராசர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலரும், உதவிப் பேராசிரியருமான அருணா ராமச்சந்திரன் கூறியதாவது:

கல்லூரி பாடத் திட்டங்களில் மாசுகளைப் பற்றி மாணவர்களுக்குச் சொல்லித் தருகிறோம். நேற்று வைகை ஆற்றுக்கு நேரடியாக அழைத்து வந்து காட்டியபோது என்னென்ன வகைகளில் நீர்நிலைகள் மாசடைகின்றன என்பதை அவர்கள் நேரடியாக அறிய இந்தப்பணி வாய்ப்பாக அமைந்தது.

எதிர்காலத் தலைமுறையினரான அவர்கள் நீர்நிலைகளை மாசுப்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தையும், சுய ஒழுக்கத்தையும் ஏற்படுத்தித் தந்தது. மேலும், அவர்கள் பலவகை குப்பைகளை அகற்றியதால் அதில் இருக்கக் கூடிய சிரமங்களை அறிந்தனர். அதனால், குப்பைகளை தரம் பிரித்து தொட்டிகளில்தான் போட வேண்டும் என்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது.

தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ளதைப் பார்த்து கரையோரங்களில் வசித்த மக்களும் சேர்ந்து குப்பைகளை அகற்றினர். வசிக்கும் தங்களுடைய பகுதிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்வை அவர்களுக்கும் இந்த தூய்மைப் பணி ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமணி
www.dinamani.com

24-12-2018 பக்கம் எண்: 2

மதுரை தியாகராசர் கல்லூரி: தியாகராசர் கல்லூரியில் ஒவ்வொரு வாரமும் நடைபெற்ற கருத்தரங்கில், மாணவர்கள் வாசித்த கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு கடம்பவனம் என்ற பெயரில் வெளியிடப்பட்டது. விழாவில், கல்லூரி முதல்வர் து. பாண்டியராஜா நூலை வெளியிட்டார். தமிழ் துறைத் தலைவர் ராம. மலர்விழி மங்கையர்க்கரசி நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் அ. மோகனா நன்றி கூறினார். Pg: 02

THE NEW INDIAN EXPRESS

12/2018

## Saiva siddantha training programme

A 10-day Saiva Siddantha training programme was conducted at Thiagarajar College, Madurai from November 25 to December 4. Speaking at the valedictory function, college secretary Karumuttu K. Thiagarajan said the nuances of Saiva siddantha should reach more people. The presence of a good number of youngsters at the training programme gave hope that culture and tradition would be kept alive, he said. The chief guest, Sivalayam Mohan, secretary of Sekkizhar Research Centre, Chennai, quoting Maraimalai Adigal, said Saiva Siddantha dealt with Sivagnanabotham and Tirukkural. Principal D. Pandiaraja proposed the vote of thanks. With a recitation from Oduvar Rathnasabapathi, the event came to a close.

THE NEW INDIAN EXPRESS

**28-12-2018** **Page No : 2**



The Indian Express 28-12-18 Pg:02

YOU THINK

# WISHLIST FOR 2019

**Students from Thiagarajar College of Arts and Science share their opinions on how to make the coming year more humane and fulfilling**

The youth of our nation are fascinated too much by movies. If that unwanted excessive craze towards the film industry goes down, I will be happy. Let us develop the habit to follow people who are genuinely inspiring.
—Deepika Kannan

Self-discipline is one quality we lack as a nation. There have been plenty of campaigns to promote cleanliness, but unless and until we decide to change at the individual level, there will be no positive outcome.
—Gokul Priyan

We need to get rid of the mindset that never allows us to take responsibility or leadership. We should volunteer for good causes and set the right example for the next generation.
—Junaifar

To avoid confusion, good communication is key. One who knows how to communicate an opinion or information in the right way will always succeed. As a society, I wish we throw away the ambiguities and speak up for ourselves.
—Sundaresh

We call ourselves an independent country, but are often not allowed to choose what we want irrespective of gender and age. As a society, I wish we become more open to choices that are uncommon. Let's not become judgemental.
—Naga Nandhini

We should learn to respect labour and take attempts to know more about our roots. We should keep ourselves aware of things that are happening around us. Let the blind following for social causes come to an end in 2019.
—Vignesh

The increasing cases of honour killing show that we are still not ripe to an equal society. Caste, creed or colour, nothing should come in the way of treating a human being with respect.
—Jaya Harini

I wish 2019 turns out to be more kind towards women. Crimes against women are increasing at an alarming rate. It is high time we treat human beings with more respect and sensitiveness, irrespective of gender.
—Akshaya Preethi

We need to take things lightly and allow people to be who they are. Stress is causing mental as well as physical deterioration. We need to make quality time for ourselves.
—Reka Sri

I hope 2019 goes on to be the year that makes people conscious about their personal hygiene as well as public hygiene. We need to understand that without being clean, we can never hope to get better at what we are doing.
—Jesima Banu

HAVE SOMETHING TO SHARE FOR LISTINGS? EMAIL US

தினமலர்
DINAMALAR
**31-12-2018** பக்கம் எண்: **3**

## பசுமை தவழ வேண்டும்

இந்தாண்டில் இயற்கை உணவுகளை சாப்பிட்டு யோகா செய்து உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள சபதம் எடுத்துள்ளேன். அனைவரும் பாலிதீன் பைகளை தவிர்த்து துணிப்பைகளை



பயன்படுத்தி, மரம் வளர்த்து நாம் வாழும் நகரை தூய்மையாக்க வேண்டும். வீடுகள் தோறும் காய், கனிகள் நிரம்பிய தோட்டம் அமைத்து பசுமை தவழ செய்ய வேண்டும்.

**ஆர்.அருணா,** உதவி பேராசிரியை

தினமலர்
DINAMALAR
31-12-2018 பக்கம் எண்: 2



துவரிமானில் திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மைய முகாமில் தியாகராஜர் கல்லூரி செயலர் ஹரிதியாகராஜன் பேசினார். இடமிருந்து மைய நிறுவன தலைவர் சந்திரசேகரன், அழகப்பா பல்கலை ஓய்வு பெற்ற துணை பதிவாளர் காளைராஜன்.

# ஒருங்கிணைப்பாளர் சிறப்பு முகாம்

**வாடிப்பட்டி, டிச.31–**

மதுரை துவரிமான் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் திருவிளையாடல் புராண ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர்கள் முகாம் நடந்தது.

மைய நிறுவன தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். அழகப்பா பல்கலை ஓய்வு பெற்ற துணை பதிவாளர் காளைராஜன், தியாகராஜர் கல்லூரி செயலாளர் ஹரி தியாகராஜன், செயலாளர் கண்ணன், பொருளாளர் சரவணன் மற்றும் பலர் பேசினர். நிகழ்ச்சியை நிர்வாகி முருகேசன் ஒருங்கிணைத்தார்.